03

பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ChatGPT இன் தாக்கம்

Impact of ChatGPT on Teaching Learning Process in Schools

Mr.R.Vijayatheepan
Faculty of Education, University of Education

அறிமுகம்

21ஆம் நூற்றாண்டின் கல்வி உலகம் "தகவல் அடிப்படையிலிருந்து அறிவு அடிப்படைக்கு" மாறியுள்ள நிலையில், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) மற்றும் குறிப்பாக ChatGPT போன்ற கருவிகள் கல்வி அமைப்பை ஆழமாக மாற்றி வருகின்றன. 2022 ஆம் ஆண்டில் ழுpநnAI நிறுவனம் ChatGPT யை அறிமுகப்படுத்திய பிறகு, கல்வித் துறையில் இது ஒரு பரவலான விவாதப் பொருளாக மாறியது. ChatGPT மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தகவல் அணுகல், கருத்து உருவாக்கம், மற்றும் கற்றல் ஆதரவு ஆகியவற்றில் புதிய அனுபவத்தை வழங்குகிறது. இதன் விளைவாக, உலக நாடுகள் தங்கள் பாடத்திட்டங்களில் AI மற்றும் ChatGPT போன்ற தொழில்நுட்பங்களை இணைக்கும் முயற்சிகளைத் தொடங்கியுள்ளன. UNESCO 2023 இல் வெளியிட்ட "AI யனெ நுனரஉயவழைn புடழடியட ஆழnவைழசiபெ சுநிழசவ" இல் கூறப்பட்டபடி, AI அடிப்படையிலான கல்விப் பாடத்திட்டங்கள் தற்போது 40 க்கும் மேற்பட்ட நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டத்தில் இதன் பயன்பாட்டை நோக்குகின்ற போது இத்தகைய கருவிகள் மாணவர்களுக்கு எளிதில் அணுகக் கூடியதாக மாற்றம் பெற்றதால், சுலபமாகக் கற்பதற்காக விரைவாக பதில்கள் மற்றும் கேள்விகளை வழங்கவும், கடினமான வினாக்களை மாணவர்கள் சுலபமாகக் கற்றுக் கொள்வதற்கும் உதவி புரிவதாகக் காணப்படுகின்றன. இந்த முன்னேற்றங்கள் தனிப்பட்ட கற்றலுக்கான ஆதரவை வழங்கி, மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதற்கு உதவுகின்றன, இருந்தும், மாணவர் ஈடுபாடு, சுய சிந்தனை மற்றும் வகுப்பறையில் ஆசிரியர்களின் பங்கு குறித்த பல்வேறு விமர்சனக் கேள்விகளை தற்போது AI இன் பிரயோகங்கள் ஏற்படுத்தியுள்ளன.

ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில்;, மாணவர்கள் பலரும் சவாலான கற்றல் வினாக்கள் அல்லது பிரச்சினைகள் வழங்கப்பட்ட போது ஆழமான அறிவாற்றலைக் கட்டியெழுப்புவதற்கான தேடல் முயற்சி அல்லது பிரச்சினைத் தீர்க்கும் செயல்முறையில் ஈடுபடாமல், உடனடிப் பதில்களை பெற ChatGPT மீது சார்ந்து வருகின்றனர். இத்தகைய நடைமுறைகள் பாரம்பரிய கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளை சவாலுக்குள்ளாக்குகின்றன. ஆகையால், AI மூலமான கற்றலுக்கான கருவியானது துணைக் கருவியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், குறுக்கு வழிப் (shortcut) பிரயோகத்திற்கான கருவியாக பயன்படுத்தப்படாமல் இருப்பதற்காக பாடத்திட்ட வடிவமைப்பு, கற்பித்தல் உத்திகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய தேவையொன்று தற்போது கல்விச் சமூகத்தில் உருவாகியுள்ளது.

மேலும், ஆசிரியர்கள் மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பாளர்களுக்கு ChatGPT ஐ வகுப்பறையில் ஒருங்கிணைப்பது சவாலான விடயமாக உருவெடுத்துள்ளது. ஒருபுறம், இது வேறுபட்ட கற்பித்தலை ஊக்குவித்து, விரைவான பின்னூட்டத்தை வழங்கி, தொடர்புடைய

கற்றல் வளங்களை உருவாக்க உதவக்கூடும். மறுபுறம், இது விமர்சன சிந்தனை மற்றும் படைப்பாற்றலைக் குறைக்கும் அபாயத்தையும், கருத்துத் திருட்டு (plagiarism) மற்றும் AI உள்ளடக்கத்தின் மீதான அதிகப்படியான சார்பையும் உருவாக்கும் சவால்களையும் கொண்டுள்ளது.

இக்கட்டுரை, ChatGPT- இன் தாக்கத்தை பாடசாலைகளில் கற்பித்தல் மற்றும் கற்றலின் கண்ணோட்டத்தில் விமர்சன ரீதியாக ஆராய்கிறது. மாணவர் நடத்தை, வகுப்பறை நடைமுறைகள் மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பில் AI ஏற்படுத்தும் தாக்கங்களை விவரிக்கும் இக்கட்டுரையானது AI வழி நடத்தும் கற்றல் சூழலில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் வாய்ப்புகளையும் சவால்களையும் வெளிப்படுத்துகிறது. மேலும், மாணவர்கள் அத்தியாவசிய அறிவாற்றல் மற்றும் பிரச்சினைத் தீர்க்கும் திறன்களை வளர்த்துக் கொள்வதோடு, பொறுப்புடன் AI கருவிகளை கற்றலுக்காகப் பயன்படுத்தும் பாதைகளை ஆசிரியர்கள் உருவாக்குவது அவசியம் என்பதையும் வலியுறுத்துகிறது. அத்துடன், தற்போதைய போக்குகள், சவால்கள் மற்றும் சாத்தியமான மூலோபாயங்களை ஆராய்ந்து, புதுமையைப் பயன்படுத்தும் போதிலும், பொருத்தமான கற்றல் விளைவுகளை உறுதிப்படுத்துவது குறித்து கல்வித் துறைக்கு தேவையான வழிகாட்டல்களையும் இக்கட்டுரை வழங்குகிறது.

ChatGPT மற்றும் மாணவர்களின் கற்றல் நடைமுறைகள்

பாடசாலைக் கல்வி சூழல்களில் ChatGPT அறிமுகமானதன் மூலம், மாணவர்கள் கற்றலை மேற்கொள்ளும் பாங்கில் அதிகப்படியான மாற்றம் நிகழ்ந்து வருகிறது. பாரம்பரியக் கற்றல் முறைகளில், மாணவர்கள் முதலில் வாசித்து, சிந்தித்து, நண்பர்களுடன் விவாதித்து, சுயமாக பிரச்சினைகளைச் சமாளித்து, பின்னர் ஆசிரியர்களின் உதவியை நாடுவது இயல்பான நடைமுறையாக இருந்தது. ஆனால்,

ChatGPT பரவலாக அணுகக்கூடிய நிலையில், இந்தச் செயல்முறை மாறுபட்ட திசையில் நகர்கிறது.

பல மாணவர்களுக்கு ChatGPT ஒரு “குறுக்கான பாதை” (shortcut) போல விளங்குகிறது. கணிதப் பிரச்சினையை சுயமாக ஆராய்ந்து தீர்ப்பதற்குப் பதிலாக, கட்டுரை எழுதுவதற்குப் பதிலாக, அல்லது படிப்படியான ஆய்வை மேற்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் நேரடியாக ChatGPT-ஐ அணுகி முழுமையான பதிலைப் பெறுகின்றனர். இத்தகைய உடனடி அணுகல், பிரச்சினையுடன் போராடும் இயல்பான கற்றல் நேரத்தையும் முயற்சியையும் குறைக்கிறது. இது செயல்திறன் மிக்கதாக இருந்தாலும், ஆழமான புரிதல், விமர்சனச் சிந்தனை, மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்க்க அவசியமான கற்றல் அனுபவத்தை இழக்கும் அபாயத்தை மாணவர்கள் மத்தியில் உருவாக்குகிறது.

மறுபுறம், ChatGPT ஒரு தனிப்பயன் கற்றல் உதவியாளராகவும் செயற்படுகிறது. உதாரணமாக, மாணவர்கள் ஒரு கணிதக் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள சிரமப்படும்போது, ChatGPT எளிமையான விளக்கங்கள், எடுத்துக்காட்டுகள் அல்லது படிப்படியான வழிகாட்டுதலை வழங்குகிறது. அதேபோல், மொழிக் கற்றலில் மாணவர்கள் எழுதிப் பழக, உடனடி மீளவலியுறுத்தலைப்; பெற இக்கருவியைப் பயன்படுத்த முடிகிறது. இவ்வகையில், ChatGPT நேரடியாக மாணவர்களின் பன்முகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வேறுபட்ட கற்றலுக்கு (differentiated learning) துணையாகின்றது.

ஆனால் மாணவர்கள் இதைப் பயன்படுத்தும் முறையில் சவால்கள்;; உள்ளன. மாணவர்கள் AI-ஐ “உதவிக்கருவி” எனப் பயன்படுத்துவதற்கும் “சிந்தனைக்கு மாற்றாக" பயன்படுத்துவதற்கும் இடையே எப்போதும் வேறுபாடுகளை உணர்வதில்லை என்பதுவே பல ஆசிரியர்களின் கருத்தாக உள்ளன. இத்தகைய நடைமுறைகள் கற்றலில் புதிய அழுத்தங்களை உருவாக்குகின்றன. AI மாணவர்களை அறிவு மற்றும்

விளக்கங்களுக்குச் சக்தி வாய்ந்த முறையில் இணைத்தாலும், அதனை மீறி சார்ந்துவிட்டால் அறிவாற்றல் முயற்சி, சுய சிந்தனை மற்றும் படைப்பாற்றலைக் குறைக்கும் அபாயங்களை உருவாக்குகின்றன..

இங்கு மாணவர்களின் சுய கட்டுப்பாடு மற்றும் அக உந்துதல் (motivation) முக்கிய பங்காற்றுகின்றன. உண்மையான ஆர்வத்துடன் கற்றலை விரும்பும் மாணவர்கள் ChatGPT-ஐ குறிப்புகள், விளக்கங்கள் அல்லது கூடுதல் எடுத்துக்காட்டுகளைத் தேடுவதற்காக பொறுப்புடன் பயன்படுத்துவர். ஆனால், சிலர் AI உருவாக்கும் பதில்களை சிந்திக்காமல் நேரடியாக நகலெடுப்பதற்கே பயன்படுத்துவர். இவ்விரு பெரும் வேறுபாடு, பாடசாலை மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப அறிவில் இரண்டு பிரிவுகளாகக் (digital divide) காணப்படுவது போல் AI இன் பிரயோகத்தின் ஊடாக அறிவார்ந்த மாணவர்களாக ஒரு சாராரும், அறிவு மட்டத்தில் குறைவாக ஒரு சாராரும் உருவாவதற்குக் காரணமாக அமைகின்றது. இவற்றின் தாக்கத்தை இழிவளவாக்கும் செயற்பாடு பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்த ஒன்றாகக் காணப்படுவதோடு, பொருத்தமான வழிகாட்டலை வழங்குவது ஆசிரியர்களின் தேவைப்பாடாக மாறியுள்ளது.

கலைத்திட்ட வடிவமைப்பாளர்களுக்கு எழும் சவால்கள்

ChatGPT மற்றும் இதற்கு ஒத்த செயற்கை நுண்ணறிவு கருவிகளின் தோற்றம், பாடசாலை மாணவர்களின் கற்றல் பாதைகளை வடிவமைக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் கலைத்திட்ட வடிவமைப்பாளர்களுக்கு முன்னெப்போதும் இல்லாத சவால்களை உருவாக்கியுள்ளது. இதில் முதன்மையானது வழிகாட்டுதல் மற்றும் சார்ந்திருக்கும் நிலைகளிடையே (guidance vs. dependence) சமநிலையைப் பேணுவது ஆகும். ChatGPT-ஐ மாணவர்கள் உதவிக்கருவியாகப் பயன்படுத்த வழிகாட்டுவதோடு, சுய சிந்தனை மற்றும் அறிவாற்றல் முயற்சியை மாற்றக்கூடிய கருவியாக மாறவிடாமல் கையாள்வது

கலைத்திட்ட வடிவமைப்பாளர்களின் முக்கிய பொறுப்பாகிறது. பாரம்பரிய கற்பித்தல் முறைகளை மறுபரிசீலனை செய்து, மனித சிந்தனை மற்றும் AI ஆதரவு ஒன்று மற்றொன்றை நிரப்பும் வகையில் கற்றல் வாய்ப்புகளை உருவாக்க வேண்டிய அவசியத்தை உருவாக்கியிருக்கிறது.

மதிப்பீட்டு நடைமுறைகள் தொடர்பாக மற்றுமொரு சவால் காணப்படுகிறது. கட்டுரைகள், செயற்றிட்டங்கள் அல்லது கணிதப் பிரச்சினைத் தொகுதிகள் போன்ற பாரம்பரிய பணிகள், ChatGPT வழியாக மிகக் குறைந்த முயற்சியிலேயே நிறைவேற்ற முடியும். எனவே, இறுதி விளைவை மட்டுமல்லாது கற்றல் செயல்முறைக்கான படிகள் (learning process), தெரிவுகளுக்குப் பின்னால் உள்ள காரணம், சிந்தனைகளின் புதுமை ஆகியவற்றையும் அளவிடக்கூடிய புதுமையான மதிப்பீட்டு முறைகள் அவசியமாகின்றன. இதற்காக வாய்மொழி நிகழ்படங்கள், சிந்தனை நாட்குறிப்புகள் (reflective journals), குழு அடிப்படையிலான ஒத்துழைப்புத் திட்டங்கள் போன்ற "மெய்யான மதிப்பீடுகள்" (authentic assessments) பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

சமத்துவமும் அணுகல் வாய்ப்பும் (equity and access) மற்றொரு முக்கியமான சவாலாகும். சில மாணவர்கள் AI கருவிகளையும் டிஜிட்டல் வளங்களையும் சீராகப் பயன்படுத்துகிறார்கள்; ஆனால், குறிப்பாக கிராமப்புறங்கள் அல்லது குறைந்த வளங்களைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் குறைவாக அல்லது இல்லாமல் போகக் கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன. AI - இனை அணுகுவதற்கு அனைவரும் சமமான அணுகல் வாய்ப்பினைக் கொண்டுள்ளார்கள் என்ற எடுகோளில் கலைத்திட்டம் வடிவமைக்கப்படுமானால், அது டிஜிட்டல் இடைவெளியை (digital divide) விரிவாக்கும் அபாயத்தை உருவாக்கும். ஆகையால், அனைத்து மாணவர்களும் பின்னணி எதுவாக இருந்தாலும்

பொறுப்புடன் AI-ஐப் பயன்படுத்துவதற்கான திறன்களை வளர்க்க, பாடசாலைக் கல்வி சூழலுக்குள் திட்டமிட்ட AI கற்றல் வாய்ப்புகளைப் கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் வழங்க வேண்டியது அவசியமாகிறது.

மேலும், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்முறை மேம்பாடு கூட கலைத்திட்டச் சீர்திருத்தங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். சிறந்த கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டாலும், ஆசிரியர்கள் AI- ஐ வகுப்பறையில் பயனுள்ளதாக ஒருங்கிணைக்கும் தன்னம்பிக்கை, திறன் மற்றும் உத்திகள் இல்லையெனில் அது பயனற்றதாகிவிடும். எனவே, பாடத்திட்டப் புதுமை, ஆசிரியர் தயார்நிலை, மற்றும் தொடர்ச்சியான தொழில்முறை ஆதரவை இணைக்கும் வலுவான பாலங்களை கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் கட்டமைக்க வேண்டும்.

இறுதியாக, AI பயன்பாட்டின் ஒழுக்கவியல் (ethical) பரிமாணங்கள் கல்வியில் முக்கிய இடம் பெறுகின்றன. கருத்துத் திருட்டு (plagiarism), மாணவர் பணிகளின் நம்பகத்தன்மை, தரவுத் தனியுரிமை, அறிவாற்றல் நேர்மை போன்ற பிரச்சினைகள் AI பரவலாகப் பயன்படுத்தப்படும் சூழலில் மேலெழுகின்றன. எனவே, கற்றல் இலக்குகளை வடிவமைப்பதைப் போலவே, ஒழுக்கவியல் வழிகாட்டுதல்கள், கட்டமைப்புகள், மற்றும் வரையறைகள் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாறு, கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் உள்ளடக்கத்தை மறு-வடிவமைப்பதோடு மட்டுமல்லாமல், செயற்கை நுண்ணறிவால் வழிநடத்தப்படும் உலகில் கற்றலின் அடிப்படைச் சிந்தனைகளையே மாற்ற வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியுள்ளது.

ChatGPT- ஐ கற்றலுடன் ஒருங்கிணைக்கும் உபாயங்கள்

ChatGPT கல்வித் துறையில் ஏற்படுத்தும் சவால்கள் தெளிவாகத் தெரிந்தாலும், கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இதன் திறன்களை அர்த்தமுள்ள கற்றல் கருவியாகப் பயன்படுத்துவதற்கான தனித்துவமான வாய்ப்புகளும் உள்ளன.

முதலாது உபாயமாக, AI- ஐ "குறுக்கான வழிக் கருவியாக (shortcut வழழட) அல்லாது, "துணைக் கட்டமைப்பு" (scaffold) கருவியாக மறுபரிசீலனை செய்வது ஆகும். இதன் பயன்பாட்டை முற்றிலும் நிறுத்துவதற்குப் பதிலாக, மாணவர்கள் ChatGPT-ஐ சிந்தனைத் துணையாகக் (thinking partner) கருதிச் செயல்பட ஊக்குவிக்கலாம். புதிய யோசனைகளை உருவாக்க, சந்தேகங்களைத் தெளிவுபடுத்த, அல்லது ஒரு கருத்தினை பல்வேறு கோணங்களில் ஆராய உதவும் வகையில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கலாம். உதாரணமாக, கணிதத்தில் ChatGPT பிரச்சினையைத் தீர்க்கும் படிகளை வழிநடத்த, ஒவ்வொரு படியையும் மாணவர்கள் தங்கள் சொந்த மொழிநடையில் விளங்கிய பின் அடுத்த நிலைக்குச் செல்லும் படிமுறையை உருவாக்கலாம். மொழி அல்லது இலக்கியப் பாடங்களில், ChatGPT யோசனைகளை உருவாக்கும் தளமாகச் செயற்படுத்தலாம் பின்னர் மாணவர்கள் அதைத் தங்களின் படைப்பாற்றல் மற்றும் தனித்துவமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் சீரமைக்கலாம். இவ்வாறு ChatGPT-ஐ ஆதரவு உதவியாளராக நிலைநிறுத்துவதன் மூலம், செயற்பாட்டுடனான கற்றலை ஊக்குவிக்கவும் கல்விசார் நேர்மையை (academic integrity) பேணவும் முடியும்.

இரண்டாவது உபாயமாக, AI- ஐ உள்ளடக்கிய மதிப்பீட்டு முறைகளை வடிவமைப்பதே ஆகும். பாரம்பரியமாக வீட்டில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் அல்லது தனிப்பட்ட பணிகளுக்கு மட்டும் பயன்படுத்தாமல், மாணவர்கள் ChatGPT-ஐ கற்றல் செயல்முறையில் எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதைக் காட்டும் பணிகளை

இணைக்கலாம். உதாரணமாக, AI உருவாக்கிய வரைபு மற்றும் அதில் அவர்கள் செய்த திருத்தங்களையும், அந்த மாற்றங்களுக்கான சிந்தனைப் பதிவையும் (reflective commentary) சமர்ப்பிக்க மாணவர்களை ஊக்குவிக்கலாம். இத்தகைய நடைமுறைகள் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாது, AI வழங்கும் தகவல்களை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யும் திறனையும், நம்பகமானதையும், உண்மையானதையும் (superficiality) வேறுபடுத்திக் கொள்ளும் நுண்ணறிவையும் மாணவர்களுக்கு வழங்குவதன் ஊடாக அவர்களது சிந்தனை ஆற்றலை மேலும் வளர்ப்பதற்கு வழிகாட்டலாம்.

மூன்றாவது உபாயமாக, கலைத்திட்டத்தில் AI அறிவாற்றல் (AI டவைநசயஉல) மற்றும் ஒழுக்கவியல் (ethics) விழிப்புணர்வை உட்படுத்துவதாகும். ChatGPT எவ்வாறு செயல்படுகிறது, அதன் வரையறைகள் என்ன?, சாத்தியமான பாகுபாடுகள் (biases) என்ன?, AI உருவாக்கும் உள்ளடக்கத்தைப் பயன்படுத்தும் போது எழும் ஒழுக்கவியல் சிக்கல்கள் என்ன? என்பனவற்றை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இதன் மூலம், ChatGPT-ஐ பயன்படுத்தும் திறனுக்கு அப்பால், அதைப் பொறுப்புடன் சந்தேகித்து ஆராயும் திறனையும் வளர்க்கலாம். கருத்துத் திருட்டு; (plagiarism), அறிவாற்றல் நேர்மை (intellectual honesty), பொறுப்பான டிஜிட்டல் குடியுரிமை (responsible digital citizenship) ஆகியவற்றைப் பற்றிய விவாதங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், AI-ஐ கல்வியிலும் நிஜ வாழ்க்கையிலும் பொறுப்புடன் வழிநடத்தும் மதிப்புகளைக் கற்றுக் கொடுக்க முடியும்.

நான்காவது உபாயம், ஆசிரியர்களின் தொழில்முறை மேம்பாட்டைப் பற்றியதாகும். மேற்கூறிய உபாயங்கள் வெற்றியடைய, ஆசிரியர்கள் AI ஆதரவு கொண்ட கற்றல் நடவடிக்கைகளை வழிநடத்தத் தேவையான தன்னம்பிக்கை, திறன்கள் மற்றும் உத்திகளைப் பெற வேண்டும்.

தொழில்முறைப் பயிற்சிப் பட்டறைகள், வளப் பகிர்வு தளங்கள், மற்றும் தொடர்ச்சியான பயிற்சி திட்டங்கள் மூலம் ஆசிரியர்கள் AI- ஐ கற்பித்தலில் இணைக்கும் வகுப்பறை நடைமுறைகளை உருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக, மாணவர்கள் ChatGPT-ஐ தொடக்க ஆய்வுகளுக்குப் பயன்படுத்தி, ஆனால் இறுதி விளைவை குழு விவாதம், பரிசோதனை அல்லது விமர்சன விவாதத்தின் மூலம் உருவாக்கும் திட்டங்களை ஆசிரியர்கள் வடிவமைக்கலாம்.

ஐந்தாவது உபாயம் ChatGPT பயன்பாட்டை உள்ளூர் கல்வி நிலையங்களுடன் (local educational realities) இணைப்பதாகும்;. தொழில்நுட்ப அணுகல் வரையறுக்கப்பட்ட பகுதிகளில், பாடசாலைகளின் வகுப்பறை சூழலுக்குள் பகிரப்பட்ட AI வளங்களை இந்நிறுவனங்கள் ஊடாக வழங்கி, அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தலாம். மேலும், தேசியக் கல்வி இலக்குகளான பிரச்சினைத் தீர்க்கும் திறன், படைப்பாற்றல், விமர்சன சிந்தனை ஆகியவற்றுடன் AI ஒருங்கிணைப்பை வலுப்படுத்தலாம். இவ்வாறு, ChatGPT இன் பயன்பாட்டை கல்விச் சீர்திருத்தத்தின் கவனச் சிதறலாக (distraction) இல்லாமல் நீண்டகால ஊக்குவிப்பாளராக (enabler) மாற்ற முடியும்.

இந்த உபாயங்களின் மூலம், AI- இன் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, அதே சமயம் மாணவர்களின் அறிவாற்றல் வளர்ச்சியையும் காக்கும் வகையில் கலைத்திட்டம் முன்னேற முடியும். ChatGPT- இன் பயன்பாட்டை எதிர்ப்பது அல்லாமல் மாறாக, அதனுடன் கூட்டாக இணைந்து கற்றலை மேம்படுத்தலாம்.

உலகளாவிய கல்வியில் ChatGPT இன் பயன்பாட்டுப் போக்குகள்

ChatGPT யின் கல்விப் பயன்பாடு 2023–2025 ஆண்டு காலத்தில் 47மூ அளவுக்கு உயர்ந்ததாக அறிக்கைகள் கூறுகின்றன.

அமெரிக்காவில், ChatGPT பாடசாலை மற்றும் உயர்கல்வி மட்டங்களில் “AI டுவைநசயஉல” பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது. New York City Department of Education முதலில் ChatGPT யைத் தடை செய்திருந்தாலும், பின்னர் 2024 இல் ஆசிரியர் பயிற்சியின் ஒரு பகுதியாக அதனை ஒருங்கிணைத்தது. தொடர்ந்து மாணவர்களின் விமர்சன சிந்தனை (critical thinking) மற்றும் தகவல் சரிபார்ப்புத் திறன்களை வளர்க்க ChatGPT யை பாடத்திட்டத்தில் கருவியாகப் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்பட்டது.

இங்கிலாந்தில், “AI in நுனரஉயவழைn குசயஅநறழசம (2023)” வழியாக பாடசாலைகளில் AI-ஐ கற்றல் வளங்கள் உருவாக்கம், மொழிக் கற்றல், மற்றும் மதிப்பீடு ஆகியவற்றில் ஒருங்கிணைத்துள்ளனர். ஆசிரியர்கள் ChatGPT யை மாணவர்களுக்கு தனிப்பயன் கருத்தளிப்பு மற்றும் விளக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

சீனாவில், கல்வி அமைச்சு 2023 இல் “Artificial Intelligence ஊரசசiஉரடரஅ கழச டீயளiஉ நுனரஉயவழைn” எனும் புதிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதன் நோக்கம் மாணவர்களுக்கு AI கருவிகளைச் சிந்தனைக் கருவிகளாக (thinking tools) பயன்படுத்தல் மற்றும் மொழி, அறிவியல் பாடங்களில் விளக்க உதவிக்காக பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவிலும், தேசிய கல்விக் கொள்கை (NEP 2020) அடிப்படையில், AI மற்றும் ChatGPT கற்றல் கருவிகள் UGC மற்றும் NCERT வழியாக பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. “AI கழச யுடட” திட்டம் மூலம் மாணவர்கள் ChatGPT போன்ற கருவிகளை ஒழுங்குமுறையுடன் கையாளக் கற்றுக்கொள்கின்றனர். இந்தியா, மாணவர்களின் ஆராய்ச்சி மற்றும் சிந்தனைத் திறன்களை மேம்படுத்துவதற்காக ChatGPT யை வகுப்பறை ஆதரவுக் கருவியாகப் பயன்படுத்துகிறது.

இலங்கையின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புகள்

இலங்கையில் ChatGPT யின் பயன்பாடு கல்வித் துறையில் இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. சில பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் ChatGPT பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளன. ஆனால் பாடசாலை மட்டத்திலான பாடத்திட்டங்களில் இது இன்னும் இடம்பெறவில்லை.

இலங்கை கல்வி அமைச்சு, UNESCO வின் "AI in நுனரஉயவழைn" வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, ChatGPT யை கல்விப் பாடத்திட்டத்தில் இணைக்கும் தேசிய வியூகத்தை உருவாக்க வேண்டும். இதன் முக்கிய நோக்கம், ஆசிரியர்களுக்கான AI திறன்களை வளர்த்தல், மாணவர்களின் சுய கற்றலை ஊக்குவித்தல், மற்றும் AI கருவிகளை ஒழுங்குமுறையுடன் கையாளும் திறனை வளர்த்தல் ஆகும்.

ChatGPT யை இலங்கையில் தொழில்நுட்பத் துறை (technology stream) மற்றும் ஆங்கிலம், அறிவியல், மற்றும் ICT பாடங்கள் போன்றவற்றில் கற்பித்தல் கற்றல் கருவியாக ஒருங்கிணைக்கலாம். இது மாணவர்களுக்கு சிந்தனை திறன், தகவல் மதிப்பீடு திறன், மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வளர்க்க உதவும்.

முடிவுரை

ChatGPT கல்வியில் ஒரு மாற்றுத்திறனான கருவியாக மாறியுள்ளது. உலக நாடுகள் இதனை கல்விப் பாடத்திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, கற்றலை தனிப்பயனாக்கி, மாணவர்களின் திறன்களை மேம்படுத்துகின்றன. ChatGPT கற்றலை சிந்தனை மையப்படுத்தப்பட்ட, சுயவிவேகத்துடன் கூடிய செயல்முறையாக மாற்றுகிறது. ஆனால் இதன் பயன்களைப் பொறுப்புடன் பயன்படுத்த ஒழுக்க நெறிகள், ஆசிரியர் பயிற்சி, மற்றும் தரவுப் பாதுகாப்புக் கொள்கைகள் அவசியமாகின்றன.

அதே நேரத்தில், இந்த மாற்றத்தின் மையத்தில் ஆசிரியர்களே உள்ளனர் என்பதை உணர்வதும் அத்தியவசியம் ஆகும். எந்த இயந்திரமும் ஆசிரியர்களின் ஆசிரியத்துவம், பரிவு, நெறிமுறை வழிகாட்டுதல் ஆகியவற்றை மாற்ற முடியாது. எனவே ஆசிரியர்கள் தொழில்நுட்பத் திறன்களுடன் மட்டுமல்லாமல், AI உருவாக்கும் உள்ளடக்கங்களை மாணவர்கள் ஆராய, கேள்வி கேட்க, விமர்சிக்க, மேலும் மேம்படுத்த வழிகாட்டும் கட்டமைப்புகளுடன் தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு ChatGPT மனித சிந்தனையின் மாற்றாக இல்லாமல், கற்றல் செயல்முறையின் துணையாக அமையும்.

இறுதியாக, படசாலைகளில் கற்பித்தல் மற்றும் கற்றலில் ChatGPT ஏற்படுத்தும் தாக்கத்தை தீர்மானிப்பது தொழில்நுட்பம் அல்ல, மாறாக பாடத்திட்டத்தில் பதியப்பட்டுள்ள மதிப்புகள் மற்றும் பார்வை ஆகும். கவனமாக வடிவமைக்கப்பட்டால், பாடசாலைகள் மாணவர்களை செயற்கை நுண்ணறிவு மையமாகக் கொண்ட உலகில் முன்னேற்றும் அதேசமயம் கல்வியின் இலக்குகளான ஆர்வத்தை ஊக்குவித்தல், சுய சிந்தனையை வளர்த்தல், பொறுப்பான உலக குடிமக்களை உருவாக்குதல் போன்ற பணிகளைச் செய்வதற்கு சுலபமான வழியில் உதவியளிக்கும். இவ்வாறான கோணத்தில், செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைப்பு ஒரு சவால் மட்டுமல்ல அது கல்வியை எதிர்காலத்துக்காக மறுபரிசீலிக்கவும், அதன் மனித மையத்தைக் கொண்டே மறு- பரிமாணப்படுத்தவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

உசாத்துணைகள்

Ali, W., & Ullah, S. (2023). *Artificial intelligence in education: Opportunities, challenges, and future directions.* Education and Information Technologies, 28(9), 11245–11262. https://doi.org/10.1007/s10639-023-11790-3

Beijing Consensus on Artificial Intelligence and Education. (2019). *UNESCO.* Retrieved from https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000368303

CBSE. (2023). *Artificial Intelligence Curriculum for Schools: Handbook for Teachers.* Central Board of Secondary Education, New Delhi.

Department for Education (DfE). (2023). *AI in Education: Guidance for Teachers and Leaders.* Government of the United Kingdom.

Kasneci, E., Sessler, K., Küchemann, S., Bannert, M., Dementieva, D., Fischer, F., ... & Kasneci, G. (2023). *ChatGPT for good? On opportunities and challenges of large language models for education.* Learning and Individual Differences, 103, 102274. https://doi.org/10.1016/j.lindif.2023.102274

Ministry of Education, China. (2023). *Artificial Intelligence Curriculum Standards for Basic Education (Trial Edition).* Beijing: Government of China.

National Education Policy (NEP). (2020). *Ministry of Education, Government of India.* Retrieved from https://www.education.gov.in/nep

New York City Department of Education. (2024). *Responsible Use of AI Tools in Education: ChatGPT Integration Framework.* New York: NYC DOE Publications.

OECD. (2023). *AI and the Future of Skills, Volume 1: Capabilities and Assessments.* OECD Publishing, Paris. https://doi.org/10.1787/1f2f3c9a-en

OpenAI. (2023). *ChatGPT in Education: Responsible Use Guidelines.* San Francisco, CA: OpenAI.

Qadir, J., Ali, A., Rasheed, R. A., & Hammad, M. (2023). *Leveraging ChatGPT for education: Opportunities, challenges, and implications.* Journal of Applied Learning & Teaching, 6(1), 1–14. https://doi.org/10.37074/jalt.2023.6.1.9

UNESCO. (2023). *AI and Education: Global Monitoring Report 2023.* Paris: UNESCO Publishing.

UNESCO. (2024). *Policy Brief: Integrating Generative AI into School Curricula.* Paris: UNESCO Institute for Information Technologies in Education.

World Bank. (2023). *Digital Education Readiness and AI Adoption in South Asia: Country Insights.* Washington, DC: World Bank Group.

World Economic Forum (WEF). (2024). *Shaping the Future of Learning: The Role of AI and ChatGPT in Education.* Geneva: WEF Publications.

Zhai, X., Chu, X., Chai, C. S., Jong, M. S. Y., & Istenic, A. (2023). *ChatGPT and education: The potential and pitfalls of artificial intelligence in teaching and learning.* Educational Technology Research and Development, 71(5), 2699–2703. https://doi.org/10.1007/s11423-023-10243-0